REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆடி 4உ புதன் (20—7—55) ★ ★ வெளியூர்: ஆடி 5உ வியாழன் (21—7—55) [இதழ் 31

கான்பூர் வேலை நிறுத்தம் கண்டிக்கப்பட வேண்டியதாம்!

இந்தியப் பிரதமர் நேரு கூறுகிறார்!

கான்பூர் வேலை நிறுத்தம் ஒரு முடிவுக்கு வருகிறது என்ற செய்தி பண்டித நேருவுக்கு மகிழ்ச்சி தருகிறதாம். "இப்படி ஒரு வெகு நீண்ட வேலை நிறுத்தம் நிகழுவது கண்டிக்கத்தக்கது; என்றாலும், வேலை நிறுத்தம் முடியுந்தருவாயிலிருப்பதாக வெளி வந்துள்ள செய்தி மகிழ்ச்சி தருகிறது," என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

டில்லி தேவதைகள் அருள் கிடைத்தால்!

ஆந்திராவிலும் உரத் தொழிற்சாலை நிறுவப்படக்கூடும்!

ரூ. 800 கோடி தொழில் திட்டம் ரூ. 200 கோடியாக இளைத்துவிட்டது!

டில்லி ஆதிபத்தியத்தின் இயல்பு குறித்து காளா வெங்கிடராவின் கருத்தும்-கலக்கமும்!

சென்னை, ஜூலை 17—

"ஆகாயத்திலுள்ள கடவுளர்களும், டில்லியில் உள்ள தேவதைகளும் நமக்குச் சாதகமாக இருக்கும் பட்சத்தில் நமக்கும் ஒரு உரத் தொழிற்சாலை கிடைக்கும்."

—இவ்வாறு, ஆந்திர அரசாங்கத் தொழில்—திட்ட மந்திரியாக இருந்துவரும் காளா வெங்கிடராவ் குறிப்பிட்டுள்ளார்.

சென்னை, ஆந்திர வியாபாரிகள் சங்கச் சார்பில் காளா வெங்கிட ராவ் அவர்களுக்கு, ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அவர் தனது பேச்சில் குறிப்பிட்டுள்ளதாவது:—

"இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய ஆந்திர திட்டத்தின் செலவுத் தொகையை மிகுதியாக்க வேண்டும் என பலரும் கோருகின்றனர்; அப்படிக் கோருகிறவர்கள், அதற்குரிய அடிப்படை உண்மையை மறந்து விடுகின்றனர்—அதாவது; செலவினத்தைப் பெருக்கும் அளவிற்கு ஆந்திராவில் வசதி இடையாது என்ற அடிப்படை உண்மையை அவர்கள் மறந்துவிடுகின்றனர்.

நமது தொழில் திட்டம் முதல் முதலாக ரூ. 800 கோடி உத்தேச செலவில் துவங்கப் பட்டதாகும்; ஆனால், அது படிப்படியாக ரூ. 200—கோடியில் வந்து நிற்கிறது; இதே தொகையில் நிலைத்திருப்போமானால், நம்மை நாமே பாராட்டிக்கொள்ள வேண்டியதுதான்.

"தொழில் துறையிலும் மற்றத் துறைகளிலும் ஆந்திரம் பின் தங்கிக் கிடக்கிறது என்பதில் எவருக்கும் இரு கருத்து கிடையாது; ஆந்திரத்தைத் தீவிரமாகத் தொழில்மயமாக்க வேண்டும் என்பதிலும் கருத்து வேற்றுமை இருக்கவில்லை. ஆனால் உண்மையில் அதற்குப் பெருந்தடையாக இருப்பது மூலதனமேயாகும்.

"உற்பத்தி ஆற்றலையும், வேலை தரும் வசதியையும் பெருக்குவதற்கு, மாவட்டம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ஒரு நடுத்தர தொழில்வீதமாவது, ஆந்திராவில் இருந்துவரும் பதினேரு மாவட்டங்களிலும் நிறுவி ஆக வேண்டும்.

"ஆந்திர மாநிலம் முழுவதிலும் கிடைத்துவரும் விற்பனை வரி சென்னை நகரில் மட்டும் கிடைக்கும் விற்பனை வரியைக் காட்டிலும் குறைவானதாகும்.

"அனேகமாக ஆந்திராவில் ஒரு செயற்கை உரத் தொழிற்சாலை நிறுவப்படக்கூடும். இப்பொழுதும்கூட ஒரு இலட்சம் டன் வரை சிந்திரி செயற்கை உரத்தை ஆந்திரா பயன்படுத்தி வருகிறது. ஐந்தாண்டு திட்ட முடிவில், அது மூன்று லட்சம் டன்னுக்கு உயரக்கூடும். எனவே, ஆந்திராவிற்கு ஒரு செயற்கை உரத் தொழிற்சாலை கிடைப்பது சாத்தியமாகும்.

"ஆகாயத்திலுள்ள கடவுளர்களும், டில்லியிள்ள தேவதைகளும் நமக்கு அனுகூலமாக இருக்கும் பட்சத்தில், நாமும் ஒரு உரத் தொழிற்சாலையை பெறுவோம்."

ஆந்திராவில் ஏறத்தாழ 44,000 சதுரமைல் பரப்பிற்கு இன்னமும் உயர்ந்த கனிப் பொருள் பற்றிய ஆராய்ச்சியே செய்யப்படாமல் இருந்துவருகிறது.

பி. சி. ஜி. பற்றி கருத்தறிவிக்க

ஆச்சாரியார் தகுதியற்றவராம்!

அமிருத கௌரி இடித்துரை

மதனபள்ளி, ஜூலை 19—

மத்திய சுகாதார மந்திரியான ராஜகுமாரி அமிருத கௌரி, 'காசநோய் தடுப்புக்கான பி. சி. ஜி. பற்றி தனக்கு சிறிதும் சந்தேகம் இல்லை'யென்று குறிப்பிட்டிருக்கிறார்.

"பி. சி. ஜி பற்றி கருத்தறிவிப்பதற்குத் தகுதியற்ற இராஜகோபாலாச்சாரியார், பி. சி. ஜி. பற்றி எதிர்ப்புப் பிரச்சாரம் செய்வது கண்டு நான் வருந்துகிறேன்; அவரது கருத்துக்கு, சென்னையில் உள்ள சிலர் மதிப்பளிப்பது கண்டும் நான் கவலைப்படுகிறேன்," என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மதனபள்ளிக்கு அருகில் உள்ள ஆரோக்கியவரம் எனுமிடத்தில், குழந்தைகளுக்கான 75 படுக்கைகள் கொண்ட ஒரு காசநோய் மருத்துவ மனையைத் திறந்து வைக்கும்போதுதான் மேற்கண்டவாறு, மத்திய சுகாதார மந்திரி குறிப்பிட்டிருக்கிறார்.

அவரும் கூறுகிறார்!

"அணுசக்தித் துறையில் ரஷ்யா, அமெரிக்காவிற்குச் சமமாக இருப்பது மட்டுமல்லாமல், அமெரிக்காவை விட அத்துறையில் ரஷ்யா, வெகுவாக முன்னேறியுள்ளது," என்று கல்கத்தா அணு பௌதிகக் கழக டைரக்டர் மேகநாத் சாகா கூறியிருக்கிறார்.

இந்தியா, ஆங்கிலமா?— தென்னாட்டவர் விருப்பம் எது?

தீர்மானிக்கும் உரிமையை அவர்களுக்கே விட வேண்டும்

வடநாட்டிற்கு தென்மொழி பிரசார சபை வேண்டுமாம்!

மாமாங்கத்திற்கு முன்பே காந்தியாரிடம் இக்கருத்து தரப்பட்டதாம்!

இந்தி சமஸ்கிருதமயமாக்கப்படுவதற்கு சதுர்வேதியின் கண்டனம்

சென்னை, ஜூலை 20—

"இந்திப் பிரச்சாரத்தில் எந்தவித நிர்ப்பந்தமும், கட்டாயமும் இருப்பது கண்டிக்கத்தக்கது; பிற்போக்கு எண்ணங்களும், ஆர்வ மிகுதியும் இந்தி வளர்வதற்கு உதவமாட்டா; இதர மொழிகளில் உள்ள இலக்கியங்களை மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்;

"பல மொழிகள்—குறிப்பாகத் தென்னாட்டு மொழிகள்—இலக்கிய வளத்தில், இந்தி மொழியைக்காட்டிலும் வெகு தூரம் முன்னேறியிருக்கின்றன;

"இந்தியும், தன்னை இன்னும் அதிக வளமுடையதாக வளர்த்துக்கொள்ள வேண்டும்; அப்போதுதான் இந்தி மொழியைப் பிறர் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுவது பலனுடையதாக இருக்க முடியும்;

"நாட்டில் இந்தி மொழி பேசுபவர்களின் எண்ணிக்கை சந்தர்ப்பவசமாக அதிகரித்திருக்கிறது என்பது மட்டுமே, இந்தி மொழியின் உயர் நிலையை நிர்ணயித்துவிட முடியாது,"

—என்று, இந்திய உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவரான பஜர்சிதாஸ் சதுர்வேதி என்ற மக்கள் சபை உறுப்பினர், சென்னை தட்சிண பாரத் இந்தி பிரச்சார சபைக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"வட இந்திய பல்கலைக் கழகங்களில் தென்னாட்டு மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகியவை கற்பதற்கு வசதி செய்யப்பட வேண்டும்.

"கலைக் களஞ்சியங்கள் தயாரிப்பதில் மத்திய சர்க்கார் வழங்கும் மானியங்கள், எல்லா மொழிகளுக்கும் தரப்பட வேண்டும்."

தொடர்ந்து அவர் கூறினார்:—

"பன்னிரண்டாண்டுகளுக்கு முன் நான் மகாத்மா காந்தியை இந்தி பிரச்சாரத்திற்காக 10 லட்சம் ரூபாய் வேண்டுமெனக் கோரிய போது, அவர் திரட்டித் தருவதாகக் கூறினார். ஆனால், தகுந்த நபர் கிடைக்காமையினால் அம்முயற்சி கைவிடப்பட்டது. இந்தி மொழி வெறியர்கள் இந்தி பரப்புவதை ஒரு அறக் குழுபோல மேற்கொள்ள வேண்டும்; பணம் எதும் பெறாமலேயே, இந்தி மொழி பரப்புவதில் ஈடுபட வேண்டும்; இதர மொழிகளின் மூத்த சோதரியாக இந்தி தன்னைக் கருதுமானால், இந்தி, 'வாழு—வாழ விடு; சேவை செய்—பங்கு பெறு,' என்ற முறையில் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

"தென்னாட்டில் இந்திக்கு எதிராக நடைபெறும் கிளர்ச்சிக்குத் தரப்படக் கூடிய பதில் எல்லாம் — 'மக்களுக்கு, தேவை எது; ஆங்கிலமா? இந்தியா?'—என்பதை அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் சுதந்திரம் தருவதுதான்!"

(4-ம் பக்கம் பார்க்க)

பண்டிதரின் பஞ்சாமிர்தம்

சோவியத் 'உலக இயக்க' முறைக்கு முரண்பட்டதாம்!

புதுடில்லி, ஜூலை 19—

"இந்தியா — ரஷ்யா கூட்டறிக்கையில் காணப்பட்டுள்ள பஞ்ச சீலக் கொள்கைகளைச் சரியாகக் கடைப்பிடித்தால், அது, 'அகில கம்யூனிசம்' (காமின்பார்ம்) மறைந்து ஒழிகின்ற நிலைமையை ஏற்படுத்தும்,"

என்று, பிரதமர் நேரு கூறியிருக்கிறார்.

ஆனால், 'காமின் பார்ம்' கலைப்புப் பற்றித் தாம் ரஷ்ய அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தவில்லை யென்றும், கூட்டறிக்கையின் காரணமாக அகில கம்யூனிசமான 'காமின்பார்ம்' கலைக்கப்பட்டுவிடும் என்று கூறவில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

"பஞ்ச சீலக் கொள்கைகளும், அகில கம்யூனிசமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை; பஞ்சசீலக் கொள்கையில் அடங்கியுள்ள வாக்குறுதிகளுக்கு 'அகில கம்யூனிசம்' விரோதமானதுமாகும்; எனக்குக் 'கம்யூனிச அகிலம்' என்ன செய்து வருகிறதென்பது தெரியாது,"

என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ரஜாக்கர் தலைவர் ரஜ்வி

அடுத்த ஆண்டு விடுதலை

ஐதராபாத், ஜூலை 19—

பம்பாய் மாநில சிறையில் ஏழு ஆண்டு காலமாகச் சிறைத் தண்டனை அனுபவித்து வருகிற ரஜாக்கர் தலைவரான காசிம் ரஜ்வி அடுத்த ஆண்டில் விடுதலை செய்யப்படுவாரென்று கூறப்பட்டிருக்கிறது. ரஜ்வியை ஐதராபாத் சிறைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் எதுவும் நடைபெறவில்லை என்றும் தெரிகிறது.

மந்திரிசபைவிஸ்தரிப்புக்கு கவர்னர் மறுப்பு!

மந்திரி சபை இராஜிநாமா செய்யும்?

சிங்கப்பூரில், சென்ற மூன்றரை மாதங்களாக பதவியிலிருந்து வந்த மந்திரி சபை, தனது இராஜிநாமாவை, சட்ட சபைத் தலைவரிடம் கொடுத்து விடுவதென மந்திரி சபைத் தலைவர் டேவிட் மார்ஷல் முடிவு செய்துள்ளாராம்.

9 பேர் கொண்ட கூட்டு மந்திரி சபையில் மேலும் 4 பேரைச் சேர்த்துக் கொள்ளுவதற்குக் கவர்னர் அனுமதி மறுத்ததே இராஜிநாமாவிற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 20—7—'55 புதன்

வளம் விசாரிக்கிறார்!

'மதியூக மந்திரியாரே!'

'மன்னர் மன்னவா!'

'நாட்டில் குடிபடைகள் சுகம்தானே! மாதம் மும்மாரி பொழிகின்றதா?'

'ஆம், மன்னவா! மழை பொழிந்து, மக்கள் மனதைக் குளிர்வித்திருக்கிறது; மன்னர் கவலை கொள்ளத் தேவை இல்லை.'

★

நாட்டிலே மழை பெய்ததா இல்லையா, என்பதையே, மந்திரிமார்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியவர்களாக மன்னர்களில் சிலர் இருந்ததாகக் கூறப்படுவதுண்டு.

மன்னன்—மக்களுக்கு வாழ்வும், நாட்டுக்குப் பாதுகாப்பும் தர நியமிக்கப்பட்டவன் என்பதை நாளாவட்டத்திலே மறந்துவிட்டிருந்த மன்னர்கள், தாங்கள் யாருக்காக, மன்னராக்கப்பட்டார்களோ அதனை மறந்து, 'நாட்டு நடப்பு'களை மந்திரிகளைக் கேட்டுத் தெரிந்துகொள்கிற அளவுக்கு மக்களையும், அவர்களது வாழ்வையும் மறந்தவர்களாயிருந்தனர் என்று வரலாறு கூறுகின்றது.

வரிகள்—மக்களின் உழைப்பின் விளைவுகள்—மன்னனின் 'பாதார விந்தங்'களில் குவியும்!

காலடியில் கொட்டிக்கிடக்கும் கோடானுகோடி செல்வத்தைக்கொண்டு கோலோச்சும் மன்னன், தன் வாழ்வை கோபுர நிலைக்கு உயர்த்திக் கொண்டது மட்டுமின்றி, 'நாட்டவர் நலந்தானே' என்று கேட்பது எத்தனை கொடிது!

மன்னர்கள், தங்கள் நேரம், நினைப்பு, ஆற்றல், அறிவு, செல்வம் அத்தனையையும் தங்கள் சொந்த சுகபோகத்திற்கே செலவிட்டு, மக்களை மறந்தனர்—'மாதம் மும்மாரி பெய்கிறதா?' எனக் கேட்டுத் திரிந்தனர்!

அளவிடற்கரிய செல்வம்—அரண்மனைகள் — மணிமாடங்கள்—மலர்த் தோட்டங்கள்—மகிழ்வூட்டும் வேட்டையாடக் கானகங்கள்!

அரண்மனைகளிலே அந்தப்புறங்கள்—அங்கே அழகிகள்!

ஆடிட ஆரணங்குகள்—மதுபான வகைகள்!—இப்படி, அவ்விரண்டிலும் மூழ்கிக் கிடந்த மன்னர்கள், குடிகளின் வாழ்வு நலன்களை மந்திரிகளிடம் விசாரித்துக் கொண்டிருந்தனர் என்று கூறப்படுவதுண்டு.

★

"உழுது பண்படுத்தி விட்டேன்—விதைக்க வேண்டும்; வேறு வழி இருக்கவில்லை — வீட்டை வைத்துக் கடன் வாங்கி விதை பெற்று விதைத்தேன்; உரமிட்டேன்; நீர் பாய்ச்சி, களை எடுத்து, கண் விழித்துக் காத்து, கதிரறுத்து, களம் சேர்த்துப் போரடித்து, பதர் நீக்கிக் களஞ்சியம் சேர்த்தேன்; எண்ணியிருந்தேன்—'எப்படியும் நம் உழைப்பின் விளைவு, வாங்கிய கடனையும் தந்து, வரும் ஆண்டு முழுதும் வாழவும் வழி தரும், என்று; ஆனல்.......! விலைகள் வீழ்ந்து விட்டனவாம்—விளைச்சல் அதிகமாகி விட்டதால்; என் செய்வேன்! எப்படி வாழ்வேன்!'—என்று ஏங்கித் தவித்தனர், விவசாயப் பெரு மக்கள் — இந்த ஆண்டு! அப்போதும், இப்போதிருக்கும் பிரகாசா தான் கவர்னராயிருந்தார்—இங்கு!

இப்போது, கடந்த சில தினங்களாக, அரிசி நல்லெண்ணெய முதலியவற்றின் விலைகள் ஏறிக்கொண்டு வருகின்றன—சாதாரண ஏழை எளிய நடுத்தர மக்கள் அவதிப்படுகின்றனர்; விலை ஏற்றம் கண்டு அஞ்சுகின்றனர்!—இப்போதும் அதே பிரகாசா தான் கவர்னராயிருந்து வருகிறார்—இங்கு!

ஆனல், இந்த நாட்டில் விலை வீழ்ச்சியும், விலை ஏற்றமும் ஏற்படுகின்றன. என்பதையும், அவை ஏன் ஏற்படுகின்றன என்பதையும், அவர் தெரிந்து கொண்டவராகக் காணேம்!

சென்னை கவர்னர் அடிக்கடி கூறிக்கொள்கிறார் — 'எனக்கு ஒரு போலீஸ்காரருக்கு இருக்கும் அதிகாரம்கூட இல்லை—என்ன வேலை இது? அதிகாரமில்லாத வேலை'—என்றெல்லாம்!

அவர் கூறுகிறபடி, 'கவர்னர் வேலை அதிகாரமற்ற வேலை,' என்று நாம் ஏற்றுக் கொள்ள இயலாது.

திட்டவட்டமான விதிகள் இல்லாவிடினும், மரபுப்படி, கவர்னரிடம்தான் ஒரு மாநிலத்து மக்களை ஆட்டிப் படைக்கும் அதிகாரம் அத்தனையும் இருக்கின்றன—இந்திய அரசியல் சட்டப்படி!

அம்மரபுப்படி, 'மந்திரிசபையின் நடவடிக்கைகள் கவர்னரின் ஒப்புதலின் படிதான் நடைபெற வேண்டும்,' என்றுதான் நாம் கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம். நடைமுறை உண்மையும் அதுதான்.

அதன்படி ஒரு கவர்னர், தான் கவர்னராயிருக்கும் மாநிலத்தின் நடைமுறைவாழ்வுடன் தொடர்புடையவராக இருக்க வேண்டியது அவசியமான ஒன்றுகும். ஆனல், கவர்னர் பிரகாசா, சென்னை மாநில நடைமுறை வாழ்வுடன் எவ்வளவு தொடர்பு கொண்டவராயிருக்கிறார் என்பதற்குப் பல சம்பவங்களை எடுத்துக் காட்டாகக் கூற முடியும்.

உத்தர பிரதேச கவர்னர் முன்ஷி சென்னை வந்துவிட்டு பம்பாய் புறப்பட்டார்; வழியனுப்ப விமான நிலையம் சென்றார், சென்னை கவர்னர் பிரகாசா; விமான நிலையப் பேச்சு வார்த்தைகளில் அரிசி விலை ஏற்றமும் இடம் பெற்றிருக்கிறது.

கவர்னர் பிரகாசா தான் கேட்கிறார்—சென்னை மாவட்ட கலெக்டரிடம் — 'அரிசி விலை ஏறுகிறதாமே! உண்மையா? அது ஏன்?'—என்று. எப்படி இருக்கிறது பாருங்கள்!

பிரகாசா சென்னை மாநில கவர்னர்; சென்னை மக்களின் வரிப் பணத்திலிருந்து ரூ. 10-இலட்சம் ஆண்டொன்றுக்கு விழுங்கிக் கொண்டிருப்பவர் கேட்கிறார் — 'அரிசி விலை ஏறவா செய்கிறது? ஏன்?'—என்று, கலெக்டரைப் பார்த்து!

மது, மங்கையர், மலர்த் தோட்டம், மணிமண்டபம் இவற்றிலேயே நினைவைச் சுழல வைத்துக் கொண்டிருக்கும் மன்னன் 'மாதம் மும்மாரி பொழிபுதா? மன்பதைகள் நலம் எப்படி?'—என்று கேட்பதைப் போல, 'ராஜபவன்' இன்பங்களில் ஊறித் திளைத்துக் கொண்டிருக்கும் சென்னை கவர்னர் பிரகாசா, 'அரிசி விலை ஏறுவது ஏன்?' என்று கேட்கிறார்—அதிகாரியிடம்!

மக்களின் வாழ்வை உடனுக்குடன், விநாடிக்கு விநாடி பாதிக்கும் விலை வீழ்ச்சி, விலை ஏற்றம் போன்ற பிரச்சினைகளிலேயே, சென்னை கவர்னர், அதிகாரிகளை எங்காவது சந்திக்கிறபோது, கூட்டத்தின் சந்தடிக்கிடையே 'ஏனிந்த ஏற்றம்?' என்று கேட்டுக்கொள்ளுகிற அளவு அக்கறை உடையவராயிருந்தால், மக்களின் இதர சாதாரண பிரச்சினைகளைப் பற்றி அவர் எப்படி எண்ணிப் பார்த்திருப்பாரோ!

'வளம் விசாரிக்கிறார்'—அக்கால மன்னர்கள் போல, கவர்னரும்! என்ன செய்வது?

தடை நீக்க எதிரொலி:

சச்சார் சர்க்கார் இந்துக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டதாம்

காங்கிரசார் ஓலம்

ஜலந்தர், ஜூலை 18—

அமிருதசரசில் சீக்கியர்கள் உரிமை முழக்கம் எழுப்புவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கியதின் மூலம் பீம்சென் சச்சார் சர்க்கார் இந்துக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது என்று பஞ்சாப் மாநில காங்கிரஸ் கட்சி செயற்குழு உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மாநில காங்கிரஸ் கட்சிச் செயற்குழுவின் அவசரக் கூட்டமொன்று சந்திகாரில் கூட்டப்பட்டிருப்பதாயும், அதில் எல்லா மாவட்ட காங்கிரஸ் கட்சித் தலைவர்களும் செயலாளர்களும் கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் தெரிய வருகிறது.

அந்த அவசரக் கூட்டத்தில், அமிர்தசரசில் விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கியதின் விளைவாக எழுந்துள்ள நிலைபற்றி விவாதிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

சீக்கியர் தனிநாடு கோரிக்கை

இந்து மத வெறியரின் மிரட்டல்!

லூதியானு, ஜூலை 19—

பஞ்சாப் மாநிலத்தை இந்திய யூனியனிலிருந்து துண்டாடும் எந்த ஒரு முயற்சியையும் எதிர்க்க ஜனசங்கம் உறுதிபூண்டிருக்கிறதாம்.

அம்மாதிரி துண்டாடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டால், ஜனசங்கம் சுமார் 50,000 தொண்டர்களைத் திரட்டி போராட்டத்தில் ஈடுபடும் என்றும், அப்படி நடைபெறும் போராட்டம் அமைதியாகவே நடைபெறும் என்றும் பஞ்சாப்-பெப்சு-இமாசலப் பிரதேச ஜனசங் இயக்கத் தலைவரான ஆச்சாரியா ராம்தேவ் என்பார் குறிப்பிட்டிருக்கிறாராம்.

மத்திய கல்வி மந்திரி காரியாலயத்தைச் சேர்ந்த இந்திப் பிரிவு, இதுவரை இந்தியில் மொத்தம் 30,526 விஞ்ஞான, தொழில் நுட்ப பதங்களைத் தயாரித்திருக்கிறது.

உத்திரப் பிரதேசத்திலிருப்பதும் காங்கிரஸ் அரசாங்கந்தான்!

"உத்திரப் பிரதேசத்தில் கோதுமையின் விலை எப்பொழுதெல்லாம் உயருகிறதோ அப்பொழுதெல்லாம், சர்க்கார், விலையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், தங்களிடமுள்ள கோதுமையை மார்க்கெட்டிற்கு அனுப்புவர்,"

என்று உ. பி. கவர்னர் கே. எம். முன்ஷி சென்னையில் குறிப்பிட்டிருக்கிறார். விலைகள் வீழும்போது மக்கள் மகிழ்ச்சியுறுகின்றனர் என்றும், விலைவாசிகள் ஏறும்போது மக்கள் தொல்லைப்படுகின்றனர் என்றும் அவரிடம் கூறப்பட்டது.

பம்பாய் செல்வதற்காக முன்ஷி விமான நிலையம் வந்தார். அவரை வழியனுப்ப வந்திருந்த சென்னை கவர்னரும், இதரும் பேசிக்கொண்டிருந்தனர்; விலை வீழ்ச்சியும், விலை உயர்வும் அவர்கள் வாய்ப்பட்டது.

சென்னை கலெக்டரிடம், 'அரிசி விலை ஏன் உயருகிறது?' என்று சென்னை கவர்னர் கேட்டாராம்; அதற்குக் கலெக்டர், 'மாநிலத்தின் பல பகுதிகளிலும் வரும் அக்டோபர், நவம்பரில்தான் பெரும் பகுதி மகசூல் நடைபெறும்; அதுவரையிலும் அரிசி விலை உயர்ந்துகொண்டுதானிருக்கும்,' என்று கூறியிருக்கிறார்.

'சாதாரணமாக மக்களால் வெகுவாக உபயோகிக்கப்படும் நல்லெண்ணெயின் விலை ஏன் உயருகிறது?' என்று மீண்டும் சென்னை கவர்னர் கேட்டபோது, கலெக்டர், 'அது, பற்றுக்குறையின் விளைவாக இருக்கலாம்,' என்று கூறியதாகத் தெரிகிறது.

இந்தியாவில் டைப் மிஷின் உற்பத்தி

மூன்று நிறுவனங்களுக்கு அனுமதி

இந்தியாவிலேயே 'டைப் ரைட்டர் மிஷின்'கள் உற்பத்தி செய்வதற்கான திட்டம் ஒன்றை இந்திய சர்க்கார் அங்கீகரித்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகர்களில் உள்ள மூன்று நிறுவனங்கள் மொத்தமாக ஆண்டொன்றுக்கு 33,000 மிஷின்கள். இத்திட்டப்படி தயாரிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதாம்.

சென்னையில் ராயலா கார்ப்பொரேஷன், கல்கத்தாவில் ரெமிங்டன் ராண்ட், பம்பாயில் காட்ரெஜ் அண்ட் போய்ஸ் ஆகிய நிறுவனங்கள்இந்த உற்பத்தியில் ஈடுபடும் என்றுதெரிய வருகிறது.

ஆசாத் பேச்சு வார்த்தைகள் தோல்வி

லண்டனில் உள்ள இந்திய அலுவலக புத்தகசாலையை இந்திய சர்க்காரிடம் தந்துவிட வேண்டும் என்பதற்காக, இந்திய சர்க்காரின் கல்வி அமைச்சர், மௌலாஞ அபுல்கலாம் ஆசாத் பிரிட்டிஷ் சர்க்காருடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் தோல்வியுற்று விட்டன என்று தெரிய வருகிறது.

அந்தப் புத்தக சாலையில், 2,20,615 அச்சான புத்தகங்களும், 20,444 கையெழுத்துப் பிரதிகளும் இருப்பதுடன், ஏராளமான சரித்திர பூர்வமான தஸ்தாவேஜுகளும் இருக்கின்றன என்று தெரிய வருகிறது.

குறுக்கெழுத்துப் போட்டி

கட்டுப்படுத்துமாறு பெப்சு சட்டசபையில் தீர்மானம்நிறைவேற்றம்

பாட்டியாலா, ஜூலை 18—

"பரிசுப் போட்டி, குறுக்கெழுத்துப் போட்டிப் பந்தயங்களைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்த மத்திய அரசாங்கம் சட்டம் இயற்ற வேண்டும்" என்று. பெப்சு மாநில சட்டசபை தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளது.

முதன் மந்திரி பிரிஷ்பன் கொண்டுவந்த அந்தத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

விவசாய ஆராய்ச்சிக் கழகம்

மத்திய இந்தியாவில் அமைகிறது

போபால்—

மத்திய இந்தியாவிற்கான விவசாய ஆராய்ச்சிக் கழகம் ஒன்றின் கால்கோல் விழாவினை மத்திய அரசாங்க மந்திரி எ. பி. ஜெயின், எச்ஹோர் எனுமிடத்தில் நடத்தி வைத்திருக்கிறார்.

இதன் மதிப்பு சுமார் ரூ. 18 இலட்சம் என்றும், இங்கு ஒரு விவசாயக் கல்லூரியும் அமையும் என்றும், இந்த வட்டாரத்திலேயே இந்தக் கழகம்தான் முதலாவது என்றும் கூறப்படுகிறது.

அப்படியானல்...

இப்போது என்ன உறவு இருக்கிறது?

சர்க்கார் ஊழியர்களுக்கும்—சர்க்காருக்குமிடையில் நல்ல உறவுகளை வளர்த்து வேலைத் தரத்தை அதிகரிக்கும் வழிவகைகளுக்கான ஒரு நிறுவனம் காணும் நோக்குடன், சர்க்கார்—ஊழியர்கள் பிரதிநிதிகளடங்கிய 'கவுன்சில்'கள் நிறுவ திரு-கொச்சி சர்க்கார் உத்திரவிட்டிருக்கின்றது என்று தெரியவருகிறது.

இந்த 'கவுன்சில்'கள் எல்லா இலாகாக்களிலும்— போலீஸ், சிறை இலாகாக்களைத் தவிர—நியமிக்கப்படும் என்றும் தெரிய வருகிறது.

அரசியலும் — ஜெயப்பிரகாஷூம்

அகமதாபாத், ஜூலை 18—

பூமிதான இயக்கத்திற்கு இரண்டாண்டுகள் மட்டுமேதான் 'ஜீவதானம்' செய்திருப்பதாயும், அந்தக் காலம் முடிந்ததும் மீண்டும் அரசியல் வாழ்வை மேற்கொண்டு, ம. சோ. கட்சிக்குத் தலைமை தாங்கப்போவதாயும் வெளிவருகிற பத்திரிகைச் செய்திகளை ஜெயப்பிரகாஷ் நாராயண் மறுத்திருக்கிறார்.

'ஏன் அவ்விதமான குறும்புத்தனமான பிரச்சாரம் தொடர்ந்து நடைபெறுகிறதோ, தெரியவில்லை' என்று அவர் ஆச்சரியம் தெரிவித்திருக்கிறார்!

ஈரான் எண்ணெய் 1954-ம் ஆண்டு ஒப்பந்தம்

விபரங்கள் இரகசியமானவையாம்!

1954-ல் ஏற்பட்ட ஈரான் எண்ணெய் ஒப்பந்தம் பற்றிய இரகசிய தகவல்களை வெளியிட அமெரிக்க அரசாங்க மந்திரி டல்லஸ் மறுத்துவிட்டிருக்கிறார். காரணம் பிரிட்டன், பிரான்ஸ், நெதர்லாந்து, ஈரான் ஆகிய நாடுகள் அந்த இரகசியங்கள் வெளியிடப்படுவதற்கு கடுமையான ஆட்சேபணைகள் தெரிவித்திருக்கின்றனவாம்.

ஈரான் முன்னுள் பிரதமரான முகம்மது முசாதீக், ஈரான் எண்ணெய்த் தொழிலை தேசிய மயமாக்கியதைத் தொடர்ந்து எண்ணெய் விநியோகத்தில் ஏற்பட்ட தேக்கத்தைத் தகர்க்க, மேற்கண்ட நாடுகளைச் சேர்ந்த எட்டு எண்ணெய்க் கம்பெனிகள், 1954-ல், ஈரான் எண்ணெயை வியாபாரம் செய்வதாக ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட்டன; இவற்றில் 5 கம்பெனிகள் அமெரிக்காவைச் சேர்ந்தவையாகும்.

கழகச் செய்திகள்

மன்னார்குடியில் தி மு. கழக பொதுக்கூட்டம்

10—7—55 அன்று மாலை, தேரடியில், தோழர் ப. நாராயண சாமி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல் ஏ., தோழியர் சத்தியவாணி முத்து அம்மையார் ஆகியோர் 'தற்கால அரசியல்' என்பது குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

நெடும்பலம் (தஞ்சை மாவட்டம்) தி. மு. கழகம்

13—7—55 இரவு 9 மணிக்கு, செல்வம் தேனீர் நிலையத்தில் தோழர் டி. எஸ். கல்யாண சுந்தரம் தலைமையில் நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில் 7—8—55-ல் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதென்றும், கழகச் சார்பில் ஒரு பிரச்சார நாடகம் நடத்த ஏற்பாடு செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கொண்டம்பட்டியில் தி.மு. கழகத் துவக்க விழா

30—6—55 மாலை 6 மணிக்கு, தோழர் ஜி பி. சோமசுந்தரம் தலைமையில் கிளைக் கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் சிற்றுளி - சுப்பிரமணியம் அவர் கொடியேற்றினார். தோழர் ப. ந. சுந்தரம் அவர்களைச் செயலாளராகக்கொண்ட நிர்வாகக் குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பின்னர் தோழர் ஜி பி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் இளங்கோ, வி. ஆர். முத்து, சிற்றுளி சுப்பிரமணியம் ஆகியோர் தி மு. கழகக் கொள்கைகளையும் இலட்சியங்களையும் விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

நெல்லை மாவட்ட தி.மு.க. செயற் குழு கூட்டம்

10—7—55 காலை 11 மணிக்கு, குற்றாலத்தில் கிளி மார்க் மாளிகையில், நெல்லை மாவட்ட தி. மு கழகச் செயற் குழுக் கூட்டம் மாவட்டச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி தலைமையில் நடைபெற்றது. ஜூன் 30-ந் தேதி முடிய வரவு-செலவு கணக்கு சரிபார்த்து ஒத்துக்கொள்ளப்பட்டதுடன், மாநில மாநாட்டுக் கோட்டா தொகையை, உடனடியாக மாவட்டப் பொருளாளருக்கு அனுப்பிவைக்கும்படி கிளைக்கழகங்களைக் கேட்டுக்கொண்டும், கழக ஆக்க வேலைக்காக மாவட்டக் கழகத்திலிருந்து மாதந்தோறும் துண்டு வெளியீடுகள் வெளியிடுவதென்றும் அதற்கு மாதந்தோறும் கிளைக் கழகங்கள் அனைத்தும் சந்தா கொடுக்க வேண்டுமென்றும், முன்னாள் மாவட்டச் செயலாளர் தோழர் சு. கந்தசாமி மேற்படி மாவட்டக் குழு கூட்டத்திற்கு வராமலும், மாவட்டக் கழக வரவு-செலவுசமர்ப்பிக்காமலும் இருப்பது குறித்து வருத்தம் தெரிவித்துக்கொள்வதுடன், அடுத்த மாவட்டக் குழுக் கூட்டத்திற்குள் வரவு-செலவு கணக்கைக் கொடுக்காவிட்டால் அவர் மீது நடவடிக்கை எடுப்பது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மும்முனைப் போராட்ட நினைவு நாள்

★

தி. மு. கழகத் தலைமை நிலைய அறிக்கையின்படி ஜூலை 15-ந் தேதியன்று திராவிடமெங்கணும் மும்முனைப் போராட்ட நினைவு நாள் நடைபெற்றுள்ளது; சிற்றூர்களிலும், பேரூர்களிலும் கொடியேற்று விழாவும், ஊர்வலங்களும், பொதுக்கூட்டங்களும் நடைபெற்றுள்ளன.

மும்முனைப் போராட்டத்தில் பங்கு பெற்று வெற்றி தேடித் தந்த வீரர்களுக்கு வாழ்த்தும், போர்க்களத்தில் அடக்குமுறைகளுக்குப் பலியான வீரத் தியாகிகளுக்கு வணக்கமும் செலுத்தியுள்ளது திராவிடம்—பெருமையுடன்!

அன்றையதினம் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

சென்னை-34-வது வட்டம்

17—7—55 மாலை 6 மணிக்கு, கழகப் பணிமனை துவக்க விழாவும், மும்முனைப் போராட்ட நினைவு நாள் கூட்டமும் தோழர் தி சு கிள்ளிவளவன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வையகத்தரசு, வ. சங்கரநாராயணன் அ பொ. அரசு ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின்னர், போராட்டத்தில் உயிர் நீத்தத் தோழர்களுக்கும், 34-வது வட்டத்தின் சார்பில் கல்வித் திட்டப் போராட்டத்தில் சிறை சென்று நோய்வாய்ப்பட்டு உயிர் நீத்தத் தோழர் பழமீர் அவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகம்

17—7—55மாலை 5-30 மணிக்கு தோழர்கள் கன்னியப்பன், நெடுமாறன் ஆகியோர் இசைக்குப் பின், தோழர் சுபிலன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் நீலநாராயணன், எம் கே. மணி, அரங்கசாமி, அன்பரசு, இலக்குமணன், கோ. தாமோதரன் ஆகியோர் மும்முனைப் போராட்டம் பற்றிப் பேசினர்.

ஒரத்தநாடு

15—7—55ல், ஒரத்தநாடு சில்வர் ஜூப்லி அருகில், தோழர் இரா. நடராசன் கழகக் கொடியேற்றினர். போராட்டத்தில் உயிர் நீத்தத் தோழர்களுக்கு வீர வணக்கம் தெரிவிக்கப்பட்டது அன்று மாலை தோழர் சா. கோவிந்தன் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் டால்மியாபுரத்தைக் கல்லக்குடியாக மாற்றும்படி சர்க்காரைக் கேட்டுக்கொண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாமக்கல்

15—7—55ல் கழக அலுவலகத்தில் தோழர் என். பி. செல்லப்பன் தலைமையில் நடைபெற்றது. தோழர் பி. குப்புசாமி கொடியேற்றினர்; தோழர்கள் நா. செம்பு, ந. பத்மராசு ஆகியோர் பேசினர்.

சூலூர்

17—7—55ல், கழகச் சார்பில், ஊர்வலமும், பொதுக் கூட்டமும் காலை 9 மணிக்கு நடத்தப்பட்டது. தோழர்கள் எஸ். என். அற்புதசாமியும், கழகத் துணைச் செயலாளரும் பேசினர். பின்னர், சிறுவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பட்டன.

கன்னிவாடி (தாராபுரம் வட்டம்)

16—7—55 மாலை 5 மணிக்கு தாராபுரம் வட்டக்குழுவின் சார்பில் கொண்டாடப்பட்டது. அன்று மாலை 50 சைக்கிள்கள் கொண்ட ஊர்வலம் தோழர் என். சண்முகம் தலைமையில் உரிமை முழக்கத்துடன் பொதுக்கூட்ட மைதானத்திற்கு வந்தடைந்தது. கோதை பொன்னப்பாவின் இயக்கப் பாடல்களுக்குப் பின் கன்னிவாடிப் பெரியார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தலைவர் உரைக்குப் பின் தோழர்கள் க. சின்னமுத்துசாமி, கண்ணுசாமி, கோதை. பொன்னப்பா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

ஆசிரியருக்குக் கடிதம் :

வெட்கமும்—வேதனையும்!

ஐயா,

சென்னை அரசியல் நிர்வாகத்திற்கு மறு பெயர் தற்போது 'பச்சைத் தமிழர் ஆட்சி' என்பதாகும். இத்தகைய நிர்வாகத்தில் நேர்மையற்ற செயல்கள், சில சமயம் அறிந்தோ, அறியாமலோ ஏற்பட்டு விடுகின்றன. அதிலே ஒன்றுதான் தமிழுக்காகப் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, இறந்த தமிழ்ப் பெரியார் திரு. வி. க.-வின் திருவுருவப் படங்களை மாவட்டப் பள்ளிகளில் திறக்கக்கூடாது என்பதாகும். தமிழ் நிர்வாகம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை பரீட்சித்துப் பார்க்க எந்த திருச்சி மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்தார்களோ, அதே திருச்சி மாவட்டத்தில்தான் இம்மானக் கேடான உத்தரவு! காமராசர், 'கனம்'மாக இருந்துகொண்டு, இந்த கனத்தைத் தரும் உத்தரவு இருப்பதானது வெட்கக் கேடானது—கண்டிக்கத்தக்கதாகும்.

இதே முதலமைச்சர் கனம் காமராசர், திருச்சி மாவட்டத்தின் சுற்றுப் பிரயாணத்தின்போது, 16-3-55ல், குளித்தலை ஊராட்சி மன்றத்திற்கு திராவிட இளைஞர் கழகம் வாங்கித் தந்த திரு. வி. க.-வின் உருவப் படத்தைத் திறந்து வைக்க அழைத்தபோது, அதை ஏற்று, அமைச்சர் அழகாகப் பேசியுள்ளார் :—

" திரு. வி. க. பெரியாரின் 40-ஆண்டு காலத்திற்கு முன் அவர் பேச்சு 'கனீர்' என்றிருக்கும்; அவர், தேசிய வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டார்; சாதாரணமாகச் சிலர் கம்ப இராமாயணம், பெரியபுராணம், குறள் போன்றவைகளில் இரண்டிரண்டு வரிகளை சேர்த்துப் பாடிக்கொண்டு 'நானும் ஒரு புலவன்' என்று சொல்லிக்கொண்டு, தொல்லை தருவார்கள்; திரு. வி. க. அப்படி அல்ல; தமிழ்ப் பெரியார் என்றால் இவருக்குத்தான் தகும்; இந்தத் திருச்சி மாவட்ட சுற்றுப் பிரயாணத்தில் இந்த நிகழ்ச்சியை மிக முக்கியமாகக் கருதுகின்றேன்; திராவிட இளைஞர் கழகத்தாருக்கு இப் பெரியாரின் படத்தைத் திறந்து வைக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது குறித்து மகிழ்ச்சி; அவர்கட்கும், இப் படத்தை ஏற்ற பஞ்சாயத்தாருக்கும் என் நன்றி!"

என்று குறிப்பிட்டார் ஏன்? அண்மையில், சென்னை ஷெனாய் நகரில், திரு. வி. க. - வின் உயர் நிலைப் பள்ளியை சென்னை அமைச்சர்கள் காமராசர், சுப்பிரமணியம், பக்தவத்சலம் போன்றோர்கள் திறந்து வைத்து சிறப்புச் சொற்பொழிவு ஆற்றியுள்ளார்கள். அழகாகப் பேசி, முரண்படும் உத்தரவு போடுவதின் அர்த்தம் என்னவோ? உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களாகக் காணப்படுகின்றார்கள் 'கனம்'கள்!

எனவே, மேற்கண்ட தடையுத்தரவை நீக்கி—தமிழ்மீதும், தமிழ்ப் பெரியார்மீதும் பற்று இருக்குமானால்—ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளிகளிலும் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. - வின் உருவப் படத்தைத் திறந்து வைக்க வேண்டும் என்ற கட்டாய உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும். செய்வார்களா?

ஓ. எம். சுப்பிரமணியன்,
பொத்தனூர்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தனியார் தொழில் துறையில், தொழிலாளர்களுக்கு மொத்தம் சுமார் 5 லட்சம் வீடுகள் புதிதாகக் கட்டிக்கொடுக்க வேண்டியிருக்கும்.

திருமணங்கள்

★

8—7—55 காலை 9-15 மணிக்கு வெங்கிடங்காலில், தோழர் அ. சந்தானம் தலைமையில் தோழர் கோவிந்தசாமி—தோழியர்கிருட்டிணம்மாள்; தோழர் சுந்தரம்—தோழியர் சந்திரா திருமணங்கள் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டியும், சீர்திருத்தத் திருமணங்களின் குறிக்கோள் பற்றியும் தோழர்கள் டாக்டர் இரா. விசயராகவன், ரா. தேவராசன், செல்ல இராமதாசு, திருநாவுக்கரசு, கோ. வெங்கட்ராமன், வ சௌரிராசன்,ஏ. எஸ். பாண்டியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இத்திருமணங்களின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

* * *

பூலாமேடு (சிதம்பரம் வட்டம்) தோழர் சி. கண்ணுதுரை—தோழியர் சரோசாதிருமணம், 8-7-55-ல் தோழர் ஆர். பாலகுருசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சண்முகம், ஆ. இராசாமணி ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

10—7—55 காலை 10 மணிக்கு, பெருகவாழ்ந்தான் மணமகள் இல்லத்தில், மன்னார்குடி தோழர் கு பாலகிருட்டிணன்—தோழியர் அமிர்தவல்லி திருமணம் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., தலைமையில் நடைபெற்றது. தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் வாழ்த்துரை வழங்கினர். மணமக்கட்கு ஏராளமான பரிசுகளும் வாழ்த்துக்களும் வழங்கப்பட்டன. இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

* * *

11—7—55 காலை 9½ மணிக்கு திருத்தணி வழி மத்தூரில் தோழர் கே. எம். முனிரத்தினம்—தோழியர் சாலம்மாள் திருமணம், தோழர் அ. ச. நடராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இளம்பரிதி, மி. ச. நடேசன், தோழியர் அலமேலு அப்பாதுரை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

* * *

7—7—55 காலை 8 மணிக்கு, செங்கற்பட்டு அடுத்த காலவாக்கம் கிராமத்தில், தோழர் எம். அலையான் இல்லத்தில், தோழர் அ. கோவிந்தராசன்,—தோழியர் சு. கமலா திருமணம், தோழர் இளம்பரிதி தலைமையில் நடைபெற்றது. தோழர் ஆர். டி. அரசு, மற்றும் சில தோழர்கள் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

10—7—55 காலை 9 மணிக்கு திசையன்விளை ஜனாப் உ. செ அவர்கள் காம்பவுண்டு ஹாலில், தோழர் எம். எஸ். இராஜையா—தோழியர் அலீஸ் ஞானம்மாள் திருமணம் தோழர் மதுரை எஸ். முத்து தலைமையில் நடைபெற்றது தோழர் எம். ஜி. ஆர். நாடகக் குழுவினரும் மற்றும் பல தோழர்களும் வந்திருந்து மண விழாவைச் சிறப்பித்தனர். தோழர்கள் எம். ஜி. இராமச்சந்திரன், என். எஸ். நாராயண பிள்ளை, பத்மனுபன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ 2 நன்கொடை தரப்பட்டது.

* * *

16-7-55 காலை 10-மணிக்கு நாகூரை அடுத்துள்ள வாஞ்சூரில் தோழர் சின்னையன்—தோழியர் பக்கிரிஅம்மாள் திருமணம் தோழர் கே. கே. சித்திரவேலு தலைமையில் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி தோழர் எஸ் கல்யாணம் சொற்பொழிவாற்றினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

11—7—55ல், திருக்கோட்டியூரில் தோழர் இரா. காசிநாதன்—தோழியர் சிவகாமி அம்மையார் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர்.

* * *

திருவெண்காடு, ஆண்டிதோப்பில், 11—7—55 காலை 10. மணிக்கு, தோழர் எம். குசேலவன் தலைமையில், தோழர் பிச்சமுத்து-தோழியர் ஞானம் விதவைத் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் டி.வி. சம்பத், கே. எஸ். சண்முகம் ஆகியோர் மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினர்.

* * *

காங்கேயநல்லூர் தோழர் மு. சண்முகம்—தோழியர் பச்சையம்மாள் வாழ்க்கை ஒப்பந்தத்தின்போது, தோழர்கள் டி. வ. திருவேங்கடம், டி. வி. இராஜாமணி, மற்றும் சில தோழர்களும் வாழ்த்துரை வழங்கினர்

மாநில மாநாட்டு நிதிக்காக

நாகர்கோவிலில் இன்னிசை விருந்து

22—7—55 வெள்ளி இரவு 10 மணிக்கு, நாகர்கோவில் அசோகா தியேட்டரில்,மதுரை தோழர் எஸ். முத்து தலைமையில், தோழியர் பி. எஸ். செல்வா, தோழர் சி. ஆர். சௌந்தரராஜன் குழுவினரின் இன்னிசை நடைபெறும்.

நன்கொடை :

ரூ. 10, 5, 3, 1 அணா 8.

ஆரம்பக் கல்விக் குழு

ஆந்திர சர்க்கார் நடவடிக்கை

ஆரம்பக் கல்விக் குழு பற்றி ஆராய ஆந்திர சர்க்கார் நியமித்த குப்புசாமி குழு செய்த சுமார் 80 சிபாரிசுகளில்,41 சிபாரிசுகளை சர்க்கார் ஏற்றுக் கொண்டிருப்பதாக கம்யூனிஸ்டு உறுப்பினரான பி. சுந்தரையாவுக்கு முதன் மந்திரி கோபால ரெட்டியார் பதில் தந்திருக்கிறார்.

தெரிந்து கொள்ளுங்கள்!

சென்னை, திரு-கொச்சி, பம்பாய், மத்திய பிரதேசம், ஒரிசா ஆகியமாநிலங்களிலுள்ள விவசாயத் தொழிலாளர் குடும்பங்களின் வருமானம் ரூ. 100 முதல் ரூ. 400 வரை இருந்துவருகிறது; ஆனால், மேற்கு வங்கம், பீகார், அசாம் போன்ற இடங்களில் அவர்களது வருமானம் ரூ. 300 முதல் ரூ. 700 வரையிலும், பெப்சுவில் 100 குடும்பங்களுள் 40 குடும்பங்களின் வருமானம் ரூ 901-க்கு மேல் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

பெயர் சூட்டல்

11—7—55-ல், திருக்குளம்பூரில், தோழர் செ. பி. சிற்றரசு அவர்களால், தோழர்கள் வை. கிட்டு, வெ. கண்ணுச்சாமி ஆகியோரது பெண் குழந்தைக்கும், ஆண் மகவுக்கும் முறையே 'பூங்கோதை,' 'சேரலாதன்' எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக, ஒவ்வொருவரும் தனித் தனியே ரூ. 1, ரூ. 1 'நம் நாடு' வளர்ச்சிக்கு நன்கொடை அளித்தனர் — வரப் பெற்றோம்—நன்றி —பொறுப்பாளர்.

ஃ ஃ ஃ

13-7-55 மாலை 4-மணியளவில் ஈரோடு தி. மு. கழகச் செயலாளர் தோழர் எம். சின்னப்பன் அவர்கள் பெண் குழந்தைக்கு தோழர் எஸ். அப்பாவு தலைமையில் பெயர் சூட்டு விழா நடைபெற்றது. தோழர் எம். சுப்பையா அவர்கள், குழந்தைக்கு, 'பூங்கோதை' எனப் பெயர் சூட்டினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

நேருவின் அகில உலக பிரேமை!

அகாலீ கிளர்ச்சியை உலக கண்ணேட்டத்தில் பார்க்க வேண்டுமாம்!

‘ஏளனத்திற்குரியது, முக்கியத்துவமற்றது’ என வசைமாரி

புதுடில்லி, ஜூலை 19—

“பஞ்சாபில் உள்ளவர்களும் இதரர்களும் அங்கு நடைபெறும் கிளர்ச்சிகளை உலகப் பிரச்சினை கண்ணேட்டத்தில் பார்ப்பார்களே யானால், அந்தக் கிளர்ச்சிகள் எல்லாம், ஏளனத்திற்குரியவை—முக்கியத்துவமற்றவை என்பது தெரியும்;

“ஊர்வலத்தில் செல்லும்போது, ஒரு குறிப்பிட்ட ஒலி முழக்கத்தைச் செய்யும் உரிமைக்காக ஒரு பெரும் கிளர்ச்சியில் ஈடுபடுவது விபரீதமாகத் தோன்றுகிறது; ஒரு பொதுக்கூட்டத்தில் ஒலி முழக்கம் செய்வது, தடுக்கப்படவில்லை; ஆனால், ஊர்வலத்தில், போட்டி மனப்பான்மை கொண்ட கட்சியினர், மற்றவருக்குக் கோபமூட்டும் ஒலி முழக்கங்களை எழுப்புவதுதான் தடுக்கப்பட்டது; அது, சட்டத்தையும் ஒழுங்கையும் பற்றிய ஒரு பிரச்சினையாகும்;

“இதை ஒரு பிரச்சினையாக்குவது, நடுநிலை, சிந்தனை இவை இல்லாமையைத்தான் காட்டும்; இதனால் நடக்கக்கூடியதெல்லாம், பெரும் முயற்சிக்குப் பின் ஒரு சிறிய காரியத்தைச் சாதிக்கலாம்—ஆனால், இதற்கிடையில் பெருங் காரியங்கள் மறைந்துவிடும்; இந்த வழியில் கிளர்ச்சிகள் நடத்துவது புத்திசாலித்தனமானதல்ல;

“பஞ்சாபில் ஒலி முழக்கம் எழுப்பும் அகாலிகளுக்கோ, அல்லது மகா பஞ்சாப் இயக்கத்தவருக்கோ நான் அனுதாபங் காட்ட முடியாது; நான் அன்றொரு நாள் குறிப்பிட்டதுபோல, இதுபோன்ற சில்லறைத் தகராறுகளைத் தீர்க்க போராட்டம் போன்ற வழிகளைக் கடைப்பிடிக்கும் மனப்பாங்கை விட்டுவிட வேண்டும்; முழு மனிதர்கள்போல நியாயமான வழியில் பரிகாரம் தேட முற்பட வேண்டுமே தவிர, முழுமை பெறாத மனிதர்களைப்போலல்ல,”

—என்று, பண்டித நேரு அவர்கள், அகாலி தளத்தவர் நடத்திய கிளர்ச்சி பற்றிக் கேட்கப்பட்டபோது குறிப்பிட்டிருக்கிறார்.

★

ஆலோசிக்க இயலாதாம்!

தற்போது ஜினீவாவில் கூடியிருக்கின்ற 4 வல்லரசு மாநாட்டில் கிழக்கு ஆசியா பற்றி உத்தியோக பூர்வமான முறையிலோ, அல்லது சாதாரணமாகவோ பேசிக் கொண்டாலும்கூட, சீன சர்க்கார் இல்லாமல் அது பற்றிய முழுப் பிரச்சினையையும் ஆலோசிக்க இயலாது என்றும், அது பற்றிக் கலந்தாலோசிக்க வேறொரு தனி மாநாட்டைக் கூட்ட வேண்டியிருக்குமென்றும் பண்டித நேரு கூறியிருக்கிறார்.

விரைவில் ஏற்படாதாம்!

‘பிரதமர் நேருவும், பாக். பிரதமர் முகமதலியும் எப்போது சந்திக்க இருக்கிறார்கள்?’ எனக் கேட்டபோது, பண்டித நேரு, இது வரையிலும் தேதி நிர்ணயம் எதுவும் செய்யப்படவில்லை என்றும், அது பற்றிய யோசனைகூடக் கூறப்படவில்லை என்றும், இந்தச் சந்திப்பு விரைவில் ஏற்படும் என்று தாம் கருதவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

தடை உத்தரவுகள் செல்லுமா?

தலைமை உயர் நீதிமன்றத்தில் வழக்காட தாரா சிங் விருப்பம்

அமிருதசரஸ்—

மொழிவழி மாநிலக் கோரிக்கைக்காக ஒலி முழக்கம் செய்வதை இ. பு. கோ. 144-ம் பிரிவுப்படி பஞ்சாப் சர்க்கார் தடை செய்தது அரசியல் சட்டத்தின்படி நியாயமானதுதானா என்று தெரிய தலைமை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர அகாலி தளத்தவர் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

சிரோமணி அகாலிதள தலைமை அலுவலகக் கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டதாயும், இம்மாதிரி வழக்காட வேண்டுமென மாஸ்டர் தாராசிங் தர்மசாலா சிறையில் அகாலிதள அதுக் குழு ஒன்று சந்தித்தபோது விருப்பம் தெரிவித்ததாயும் அகாலிதளச் செயலாளரான, ஆஜ்மீர் சிங், குறிப்பிட்டிருக்கிறார்.

தென் வியட்நாம் ஜினீவா ஒப்பந்தத்திற்குக் கட்டுப்பட்டதாம்!

ஆனல் பிரிட்டிஷ் ஒப்பந்தத்தால் இந்தியா கட்டுப்படாததாம்!

பண்டித நேருவின் விசித்திர சித்தாந்தம்!

“ஜினீவா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிரெஞ்சு சர்க்காரைத் தொடர்ந்து அடுத்து வந்த சர்க்காராக தென் வியட்நாம் சர்க்கார் இருப்பதால் ஜினீவா ஒப்பந்தம், தென் வியட்நாம் சர்க்காரையும் ஒரு வழியில் கட்டுப்படுத்துகிறது என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள்; அப்படியானல், முன்பு காலனிகளாயிருந்த எல்லா சர்க்கார்களும், தங்களின் முன்னாள் எஜமானர்கள் மேற்கொண்ட ஒப்பந்தங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்று ஏற்றுக்கொள்கிறீர்களா? 15-ம் நூற்றாண்டில் பிரிட்டிஷார் போர்த்துகீசியருடன் மேற்கொண்ட ஒப்பந்தத்திற்கு நீங்கள் கட்டுப்பட்டவர்கள் அல்லவா?”

என்று, பண்டித நேருவை ஒரு பிரிட்டிஷ் பத்திரிகையாளர் கேட்டிருக்கிறார்.

“நீங்கள் அந்த ஒப்பந்தத்தைப் படித்துப் பார்த்துவிட்டு கேள்வி கேட்பது நல்லது; மலையேறிவிட்ட நீண்ட நெடுங்காலத்திற்கு முன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் அது; நவீனகால உலகுக்கு எவ்வகையிலும் ஒத்துவராத விபரீதமான விதிகளைக் கொண்டது அந்த ஒப்பந்தம்—அதாவது, வில்லும் - அம்பும் கொண்டவர்களுக்கு செய்ய வேண்டிய காரியங்கள் பற்றிக் கூறுவதாகும்; 15-ம் நூற்றாண்டில், இந்தியாவில், பிரிட்டிஷார் இருக்கவில்லை; இங்கிலாந்து அப்போது ஒரு சிறிய நாடாகத்தான் இருந்தது,”

என்று, பண்டித நேரு, அக்கேள்விக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

“கோவா பற்றி, பெரியதோ சிறியதோ எந்த ஒரு வல்லரசும் முட்டாள்தனமான கருத்தறிவிப்பதை நாம் சகித்துக்கொள்ள மாட்டோம் என்பதை உலகமும், அட்லாண்டிக் நாடுகளும் கவனத்தில் கொள்ள வேண்டும்,”

என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

கோவா பற்றிய இந்திய சர்க்காரின் கொள்கையை, பிரிட்டிஷ் பத்திரிகைகளில் சில கேலியும், கிண்டலும், ஏளனமும் செய்வதை பண்டித நேரு வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

“நாம் சமாதான வழிகளிலேயே கோவா பிரச்சினைக்கு முடிவு காண எண்ணுகிறோம் — அதனையே தொடர்ந்து கடைப்பிடிப்போம்” என்றும் கூறியிருக்கிறார்

“அறவழி அச்சுறுத்தலுக்கு மட்டுமின்றி உண்மைகளைக்கூட கோவா அதிகாரிகள் இலட்சியம் செய்யாதவர்களாக இருக்கின்றனர் என்று நாம் எண்ணுகிறோம்; அதனால், கோவாவில் அவர்களின் ஆதிக்கம் அழிந்துபடும்—அவர்கள் கவனக் குறைவாயிருந்தால் போர்ச்சுகலில்கூட அவர்களின் ஆதிக்கம் அழிந்துபடும் என்றும் நாம் எண்ணுகிறோம்;

“அரசியல், சரித்திர உண்மை நிலை, மதத்துறை முதலிய எந்த ரீதியாகவும் கோவாவில் போர்த்துகீசிய அதிகாரிகள் ஆதிக்கம் செலுத்துவது மானக் கேடான செயலாகும்,” என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

கழகக் கூட்டம்

★

அப்பம்பாளையம்

22—7—55 *மாலை* 5 *மணிக்கு*

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

எஸ். அப்பாவு

மும்முனைப் போராட்ட நினைவு நாள்

★

21—7—55 *மாலை* 6 *மணிக்கு, சென்னை–சூளை* 17-*வது வட்ட தி மு கழகப் பணிமனையில் மும்முனைப் போராட்ட நினைவு நாள் கூட்டம் நடைபெறும். தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் பேசுவார்.*

பாராட்டுக் கூட்டம்

★

22—7—55 *வெள்ளி மாலை* 6 *மணிக்கு, வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பகச் சார்பில், சென்னை-வண்ணை பாண்டியன் திடலில் (கல்லறை மைதானம்) தி. மு. கழக துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களைப் பாராட்டி, தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில், தோழர் கண்ணதாசன், தோழியர் தேசியமணி, மற்றும் பலர் பேசுவர்.*

சொற் பயிற்சிக் கூட்டம்

20—7—55 *மாலை, சென்னை* 5-*வது வட்ட தி மு கழக இல்லில், தோழர் ரகீம் தலைமையில், ‘மெய்யும்—பொய்யும்’ என்ற பொருள் குறித்து தோழர்கள் பலர் பேசுவர்.*

ஜெர்மன் பிரச்சினையில் கருத்து வேறுபாடுகள்

ஜினீவா மாநாட்டில் நால்வர் பேச்சுக்கள்

ஜினீவா, ஜூலை 19—

“சோவியத் ரஷ்யாவிற்கு எதிராக அமெரிக்கா, எப்போதுமே ஆக்கிரமிப்பு முறையில் போர் தொடுக்காது; அமெரிக்கா, தன்னுடைய தற்காப்பிற்காக மட்டுமே போருக்குச் செல்லும்,”

என்று அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனேவர், நால்வர் மாநாட்டில் உறுதிகூறியிருக்கிறார்.

“ரஷ்யா, 15 நாடுகளின் அட்லாண்டிக் ஒப்பந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும்; அந்த ஒப்பந்தம், சமாதானத்திற்காக அல்லாமல் யுத்தத்திற்கான ஏற்பாடாக இருந்திருக்குமானல் நான், அமெரிக்காவின் ‘மகா சேனதிபதி’ பதவியை ஏற்றிருக்கமாட்டேன்,”

என்றும் அவர் கூறினர்.

ஜெர்மன் ஐக்கியம்பற்றிப்பொதுவான சில உடன்பாடுகள் இருக்கிறதென்றும், ஆனல், அந்த உடன்பாடுகளை நிறைவேற்றும் காலத்தைப் பொறுத்த பிரச்சினையிலேயே கருத்துவேற்றுமைகள் ஏற்படுகின்றன என்றும் பிரிட்டன் பிரதமர் சர். அந்தோனி ஈடன் கூறினர்.

பிரெஞ்சுப் பிரதமர் பாவ்ரே, ஜெர்மன் பிரச்சினை குறித்துத் தமது கருத்தைத் தெரிவிக்கையில், “ஜெர்மன் இணைப்பைத் தாமதப்படுத்துவது என்பது ஒற்றுமையே ஏற்படாதது போலத்தான் இருக்கிறது” என்றார்.

சோவியத் பிரதமர் மார்ஷல் புல்கானின், ஜெர்மன் பிரச்சினை குறித்துப் பேசுகையில், கிழக்கு ஆசியா உட்பட மற்றப் பிரச்சினைகள் குறித்தும் ஆலோசிக்கப்பட வேண்டும் என்றும், கெடுபிடிப் போர் நிறுத்தம், கடுநிலைமை பற்றிப் பேசுவதற்கென ஒரு மாநாடு கூட்டுவது ஆகியவை குறித்தும் பேசியிருக்கிறார்.

★

நால்வர் ஆலோசனை

இன்று மாலை கூடிய நான்கு வல்லரசுகள் அதிபர்கள் மாநாட்டில், காலையில் 4 வல்லரசு நாடுகளின் அயல் நாட்டமைச்சர்கள் தயாரித்த 4 அம்சங்கள் கொண்ட நிகழ்ச்சி நிரல்கள் அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்டது.

பிற்பகல் கூட்டத்திற்குப் பிரெஞ்சுப் பிரதமர் பாவ்ரே தலைமை தாங்கினர்.

ஜெர்மன் ஐக்கியம், ஐரோப்பியப் பாதுகாப்பு, ஆயுதப் புறக்கணிப்பு, மேற்கத்திய நாடுகளுக்கும்—ரஷ்ய நாடுகளுக்குமிடையே தொடர்பை வளர்த்தல் போன்ற 4 அம்சங்களும்தான் மேற்படி நாடுகளில் அயல் நாட்டமைச்சர்கள் தயாரித்த நிகழ்ச்சி நிரலாகும்.

பிற்பகல் மாநாடு துவக்கத்திலேயே ஜெர்மன் ஐக்கியம் பற்றிய பிரச்சினை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ரஷ்யப் பிரதமர் புல்கானின் இது குறித்துத் தமது கருத்தைத் தெரிவிக்கையில், ஜெர்மனுக்கிடையே ஐக்கியம் சாத்தியமாகும் பொருட்டு, இரண்டு ஜெர்மன் அரசுகளான கிழக்கு—மேற்கு அரசுகள் கலந்து பேச வேண்டுமென்று கூறினர்.

பிரிட்டன் பிரதமர் சர். அந்தோணி ஈடன் பேசுகையில், சுயேச்சையான தேர்தல் மூலம் ஜெர்மனியை ஒன்றுபடுத்த வேண்டும் என்ற திட்டத்தை விளக்கிப் பேசியிருக்கிறார். மேலும் அவர், பாதுகாப்பைப் பொறுத்த பிரச்சினையில் நான்கு வல்லரசுகளும், ஐக்கிய ஜெர்மனியும் உடன்பாடு காணவேண்டும் என்று கூறினர்

இந்தியா முழுவதிலுமுள்ள குழந்தைகள் புத்தகசாலைகளில் வைப்பதற்காக, இந்தியில் 25-இலக்கியப் புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

பெங்களூரில்

‘நம் நாடு’ விற்பனையாளர்

திரு. முனிராஜ்

c/o. திரு. ஜி.டி. சண்முகம்

தர்மராஜா தெரு,

பெங்களூர் (கண்ட்)

இந்தியா, ஆங்கிலமா?...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மேலும் இந்தியை சவமொழியமாக்குவதையும் அவர் எதிர்த்திருக்கிறார்.

“இந்தி தேசீய மொழியாவதற்கு தொடர்ந்து தென்னாட்டில் எதிர்ப்பு நீடிக்குமானல், இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தி, எல்லா மொழிகளும் தேசீய மொழி அந்தஸ்துப் பெறுமாறு செய்யவேண்டும்,”

என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மனைவியைக் கடத்திய கணவன்!

கோலார், ஜூலை 19—

இங்கு, சீனிவாசபுரம் எனும் நகரிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்திற்கு முன்னல், திடீரென ஒரு மோட்டார்கார் நிறுத்தப்பட்டு, அதிலிருந்து இரண்டொரு இனந்தெரியாத ஆட்கள் இறங்கி, நேரே பள்ளிக்குள் சென்று; அங்கு பாடம் படித்துக் கொண்டிருந்த சரசுவதம்மா என்ற சுமார் 20-வயதுடைய பெண்மணி ஒருவரை இழுத்துச் சென்று மோட்டாரில் போட்டுக்கொண்டு சென்றனராம்!

இதைக் கண்ணுற்ற மற்ற மாணவர்கள் கார்மீது கற்கள் வீசியும், மற்றும் பல முயற்சிகள் மேற்கொண்டும் காரை நிறுத்த முடியாமற் போய்விட்டதென்றும், ஆனல் மேற்படி காரில் கடைசியாக ஏற முயற்சித்த வாலிபன் ஒருவனை அம்மாணவர்கள் பிடித்துக் கொண்டு அவனைப் போலீசாரிடம் ஒப்படைத்தனர் என்றும் தெரிகிறது.

போலீசார் மேற்படி நபரை விசாரித்ததில் பள்ளிக்கூடத்திலிருந்து இழுத்துச் செல்லப்பட்ட சரசுவதம்மா என்ற பெண் தனது மைத்துனி என்றும், அவரை இழுத்துச் சென்றவர் தனது சகோதரர் — சரசுவதம்மாவின் கணவன் என்றும், அவர்களிருவருக்கும் சுமார் 4 ஆண்டுகட்கு முன்னரே திருமணமாகி 3 வயதுடைய பெண் மகவு ஒன்று இருப்பதாகவும், ஆனல், 8 ஆண்டுகட்கு முன்னர் சரசுவதம்மா தனது பெற்றோர் வீட்டிற்கு வந்ததாகவும், அதன் பின்னர் கணவன் வீட்டுக்கே வரவில்லை என்றும், இதனிடையே அவர் பள்ளியில் சேர்ந்து படிக்க ஆரம்பித்துவிட்டார் என்றும் கூறினராம்!

1954—55-ம் ஆண்டில் இந்திய தேசீய விஞ்ஞான சஞ்சிகைகள் சேகரிப்புநிலையத்துக்கு, விஞ்ஞான நிறுவனங்கள், சர்வ கலாசாலைகள், தொழில் துறை நிறுவனங்கள், தனிப்பட்ட விஞ்ஞானிகள் முதலியோரிடமிருந்து மொத்தம் 4,800-ஆர்டர்கள் வந்ததில், அவைகளுக்கு அந்நிலையம் மொத்தம் 3,021-விஞ்ஞானப் பத்திரங்களை வினியோகம் செய்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.